www.padippakam.com

# காகம்

**Kakam**




11 November 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தாகம்

"முற்றமெல்லாம் புழுங்கல் - அதனால்
நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்

## திரும்பி வர போதல்

யுத்தங்களினால் மனிதஇனம் அல்லாடிக்கொண்டிருக்கின்ற 20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி இது.மனிதர்கள் இடம் பெயர்வது கட்டாய நிகழ்வாகிவிட்டிருக்கிறது.தேசிய இனங்களுக்கிடையான முரண்பாட்டு முற்றலின் ஒரு தொடர்ச்சியாக எழும் தேசிய இனப்போராட்டங்களால் உலகம். அமைதியிழந்திருக்கிறது.

இந்தவரிசையில் இன்று ஈழத்தமிழினம் யுத்த அபாய சூழலிலிருந்து விலகி உலகமெலாம் பரவுகின்றது.அங்ஙனம் பரவிவரும் ஈழத்தமிழினம் தாம் பரவிய இடங்களிலும் அவர்சார்ந்த இனத்தின்பெயரால் புதிய கோணங்களில் பிரச்சனை எதிர்நோக்கிவருவதுடன்; அவ்வவ்நாடுகளுக்குள்ளே ஸ்தாபனமயப்பட்டுவரும் நிற, இன எதிர்ப்பு வாதங்களின் முனைப்புகளையும் சந்திக்க தயாராகின்ற காலமும் ஈழத்தமிழர்களை புலம்பெயர் நாடுகளில் அச்சுறுத்தும் வண்ணமாக பெருகி வருகிறது. இவை ஒருபுறமிருக்க தாய்நாட்டிற்குள்ளேயேஅகதியாக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டு பெரும் துன்பத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கும் எமது இனத்தினரின் நிலை கவலைக்கிடமானது. அண்மைக்கால(1994 ஆகஸ்ட்) புள்ளிவிபரம் ஒன்று சுட்டுவதுபோல .......

இடம்பெயர்ந்த ஈழத்தமிழர் எண்ணிக்கை

| | |
|---|---|
| வடகிழக்கு மாகாணங்களுக்குள் | 5.14.000 |
| ஈழ எல்லைகளுக்கு வெளியே(ஸ்ரீலங்கா) | 1,40,000 |
| தமிழ்நாடு | 1,70,000 |
| பிறநாடுகள் | |
| ஐரோப்பாவிலும் வடஅமரிக்காவிலும் புகலிடம் தேடும் தமிழர்கள் | 4,00,000 |
| மொத்தம்.................................................................. | 12,24,000 |

இத்தகவல் ஒருபுறருக்க தற்போதய புதிய தகவல்களின் படி மூன்று லட்சத்திற்குமதிகமான ஈழவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து போர் அச்சுறுத்தல் குறைந்த இடங்களுக்குள் புலம்பெயர்ந்துள்ளனர்.அத்துடன் யாழ்ப்பாணம் முற்றிலும் வெறுமையாகிவிட்டது என்று செஞ்சிலுவைச்சங்க ஊழியர் ஒருவரின் செவ்வி தகவல் தருகிறது.

மொத்தத்தில் என்றும், இன்றும் எமக்கு அறிவுறுத்துவதொன்று என்று ஒன்று உண்டு.அதாவது வீட்டையும், அன்றாட சமுகவாழ்வையும் இழந்துள்ள ஈழத்தமிழர்கள் (எல்லோருமே)எங்கு வாழ்ந்தாலும் எமது தாயகத்தில் மனிதர்களற்ற மண்ணை தக்கவைக்கும் பணியில் யுத்தம் நிகழ்வதாக இன்றைய நிகழ்ச்சிகள் எமக்கு எடுத்துக்காட்டினாலும்;

உண்மையில் நாமெல்லோரும் என்றோ எமது தாயகத்திற்கு திரும்பிச்சென்று காலாறும் காலம் வரும். இந்த உண்மையை நாம் எல்லோரும் தடங்கலின்றி ஏற்றுக்கொள்வோமானால்...........

தூரநோக்கில் எமது சமுதாயம் இழந்தும்,இழந்துகொண்டுமிருக்கின்ற கல்வி, பொருளாதாரம்,தொழில்அபிவிருத்தி, சமத்துவமான ஒரு சமுதாய உயர்வுநோக்கிய ஒரு கலாச்சார வளர்ச்சி என்பவற்றுக்காக நாம் இன்றே திட்டமிடல்வேண்டும், அதற்காக உழைத்தலும்வேண்டும்.

இந்த வரலாற்றுத்தேவையை போர்ச்சூழலிலிருந்து விலகிவாழும் மக்கள் குழுவாகிய புலம்பெயர் மக்களிடம் அவர்களின் முன்னே அவசரமாக எழுந்துநிற்கிறது என்பதனை காகம் இங்கே வலியுறுத்துகின்றது. ■

உள்ளே.........


| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen கதை |
| 7 | மலர்தல்,வாடல், தெரிதல் |
| 10 | ஆந்திரே |
| 13 | நாரும் போரும் |
| 14 | கண்ணீர் |
| 15 | வரலாற்றிற்கு ஒரு கடிதம் |
| 19 | சிறுகதை |
| 23 | சூரியப்பூச்சிகள் |
| 25 | போட்டி |
| 26 | போட்டி இல.ம்.2 முடிவுகள் |




அட்டைப்படம்

ஆகாயம் எனது வீடாயிற்று.
வாடகை இல்லதாத செல்வம் அது.
எல்லை இல்லாத வாழ்வு.
தடையற்ற பார்வை.
குருவிகள் மட்டும் எனது வீட்டுக்குள்
வந்துபோகலாம்.
வளர்மதி எனது காதலி,
சூரியன் எனது புதல்வன்,
நட்சத்திரங்கள் எனது தோழர்கள்.
காற்றே எனது ஆகாரம்

பூமி



படிப்பகம்

www.padippakam.com

H.C.ANDERSENனின் கதை

தமிழில்: விழி

# காதல் மனிதர்கள்

மேசை இலாச்சிக்குள் இருந்த பல விளையாட்டுச் சாமான்களுக்கிடையே ஒரு பம்பரமும் பந்தொன்றும் இருந்தன. "நீண்டகாலமாக நாங்கள் இருவரும் இந்தமேசையின் இழுப்பறைக்குள் இடிபட்டவாறே இருக்கிறோம். நாங்கள் இருவரும் காதலர்கள் ஆகிவிடலாமா?" என்று பம்பரம் பந்தைக் கேட்டது.
பந்தோ மிக அழகாகத்தைக்கப்பட்டிருந்தது. தான் மிக அழகான பெண்என்று தனக்குள் நம்பிக்கை வைத்திருந்த அந்தப் பந்து பம்பரத்தின் இந்தக் கேள்விக்கு எதுவும் சொல்லிக் கொள்ளவில்லை.

அடுத்தநாள் அங்கிருந்த விளையாட்டுச்சாமான்களுக்கு சொந்தக்காரனான ஒருசிறுவன் அங்கே வந்தான். அவன் அப்பம்பரத்தை எடுத்து அதற்கு சிவப்பும் மஞ்சளுமாக வர்ணம் தீட்டினான். வெங்கலத்திலான ஆணியை நடுவில் அறைந்தான். பம்பரத்தை சுழற்றிவிட்டபோது அது தனக்கே உரிய தன்மையுடன் மிகஅழகாக, இரைச்சலுடன் அசைந்தது." என்னைப் பார்" என்றது பம்பரம் பந்தைப்பார்த்து."இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?" நாங்கள் இருவரும் காதலர்களாகி விடலாமா? நாம் இருவரும் ஒருவருக்கொருவர் பொருத்தமாக இருக்கிறோம். நீ துள்ளிப் பாய்கிறாய். நான் நடனமாடுகிறேன் மற்றவர்கள் எவரும் அடையாத சந்தோசத்தை எங்கள் இருவராலும் பெறமுடியும்". என்று பம்பரம் மேலும் கூறியது. ஆனால் பந்தோ "நீ அப்படி நினைக்கிறாய்.எனது அப்பா அம்மா எவ்வளவு மேன்மையானவர்கள். மேலும் எனது வாழ்க்கையில் ஒரு இடைஞ்சல் இருக்கிறது" என்றுசொல்லியது.
"அதுசரிதான் ஆனால் நானும் மிகஉறுதியான மரத்தினாலேயே செய்யப்பட்டிருக்கிறேன். எனக்கு உரித்தானவன் என்னைச் சுழற்றிவிட்டுப் பார்க்கும் போது எவ்வளவு சந்தோசத்தை அடைகின்றான்" என்று பம்பரம்கூறியது.
"சரி நான் இதை நம்பலாமா? என்று பந்து கேட்டது.
பம்பரமும் "நான் பொய்சொல்லி தண்டனைபெற ஒருபோதும் விரும்பியதில்லை" என்று கூறியது.
"நீ நன்றாகத்தான் கதைக்கிறாய் இருந்தும் என்னால் உன்னை ஏற்கமுடியாது. ஏனெனில் நான் ஒரு பறவையை மணப்பதற்காக அரைவாசி நிச்சயம் செய்யப்பட்டவளாக இருக்கிறேன். ஒவ்வொருதடவையும் நான் வானத்தில் மேலெழும்போது அப்பறவை தனது கூட்டிலிருந்து தலையை உயர்த்தி சம்மதம் தெரிவிக்கச் சொல்லிக்கேட்கும். இறுதியில் நானும் அதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டேன். ஆனால் நான் உனக்கு ஒன்றை உறுதியாகச் சொல்கிறேன். நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று பந்து பம்பரத்திடம் கூறியது.

பம்பரமும்" நீ இப்படிச்செய்வதே பெரியஉதவி" என்றுசொல்லி பேச்சை முடித்துக்கொண்டதுடன் இருவரும் ஒருவருடன் ஒருவர் கதைத்துக் கொள்ளவில்லை.

அடுத்தநாள் பந்து வெளியே எடுக்கப்பட்டு வானவெளியில் மிகஉயரத்தில் அடிக்கப்பட்டதை பம்பரம் பார்த்தது. பந்து ஒரு பறவையைப்போல வானத்தில் மிகஉயரத்தில் கண்பார்வையிலிருந்து மறையும்தூரத்திற்குச் சென்று ஒவ்வொரு தடவையும் கீழேவந்து நிலத்தைத் தொட்போது ஒருபெரியதுள்ளலுடன் எகிறிப் பாய்ந்தது.

ஒன்பதாவத தடவை அப்பந்து மேலே அடிக்கப்பட்டபோது அது திரும்பிவரவேயில்லை.பந்துக்கு சொந்தக்காரனான அச்சிறுவன் பலஇடங்களில் அதைத்தேடியும் அப்பந்தை அவனால் கண்டுபிடிக்கமுடியவில்லை. "பந்து எங்கே இருக்கிறதென்று எனக்குத்தெரியும்.அது அப்பறவையின் கூட்டுக்குள் அப்பறவையை



படிப்பகம்

திருமணம் செய்துகொண்டு இருக்கிறது." என்று ஒருபெருமூச்சுடன் பம்பரம் தனக்குள் சொல்லிக்கொண்டது.

பம்பரம் தனது காதல் நிறைவேறாதுபோனாலும் தான் பந்தைப்பெறமுடியாதுபோனாலும், தனது ஒருதலைக்காதலினால் அது அப்பந்தையே நினைத்து உருகியது.பந்து இன்னொருவரை தேர்ந்தெடுத்திருந்தபோதும் பம்பரம் தான் வட்டமாக சுற்றும்போதும், நடனமாடும்போதும் எந் நேரத்திலும் அப்பந்தையே நினைத்துக் கொண்டது.அதனது காதல் நினைவுகளும் நாளுக்குநாள் மெருகேறிக்கொண்டிருந்தது.

இவ்வாறே பலவருடங்கள் சென்றன. அந்தக் காதலும் பழைய காதலாயிற்று. பம்பரம் தனது இளமையை இழந்துவிட்டது.

ஆனால் ஒருநாள் அப்பம்பரத்திற்கு தங்கமுலாம் பூசப்பட்டு மிகஅழகாக ஆக்கப்பட்டது. ஒருபோதும் காணப்படாத அளவுக்கு அது இப்பொழுது மிக அழகுடன் திகழ்ந்தது. தங்கத்தால் செய்ததுபோன்று காணப்பட்ட அப்பம்பரம் துள்ளிப்பாய்ந்து சுற்றி சுற்றி மிக ஆவலுடன் எதையோதேடியது. உயரத்தில் துள்ளிப்பாய்ந்து எங்கோ மறைந்துபோயிற்று.

எல்லாஇடமும் தேடியாகிவிட்டது. நிலவறையிலும் தேடியாயிற்று. பம்பரத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.அது எங்குதான் போயிற்று?

அது பழைய குப்பைகூழங்கள் இருந்த ஒரு பெட்டிக்குள் விழுந்துபோயிருந்தது. அதற்குள் சரளைக்கற்களும்,வீட்டின்மேற்கூரையிலிருந்து விழுந்திருந்த பலபொருட்களும் இருந்தன.

"நான் இதற்குள் நன்றாகத்தான் விழுந்துவிட்டேன் இப்படியே இருந்தால் எனது தங்கநிறம் விரைவில் எடுபட்டுவிடும். இவை என்ன! என்னைச்சுற்றிலும் பலவிதமான பொருட்கள்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டது.

பம்பரத்திற்குப்பக்கத்தில் ஒரு அதிசயமான வட்டமான பொருளொன்றிருந்தது.அதைப்பார்ப்பதற்கு ஒருபழைய அப்பிள்பழத்தைப் போன்றிருந்தது. ஆனால் அது உண்மையில் அப்பிள்பழமல்ல.அது ஒரு பழையபந்து. பலவருடங்களாக மேற்கூரையின் பீலிக்குள்ளிருந்து இப்போது தண்ணீரால் அள்ளுண்டு கீழே குப்பைக்குள் விழுந்திருந்தது.

"நான் கதைத்துப்பேசுவதற்கு என்னைப்போலுள்ள ஒருவரை அனுப்பிவைத்ததற்கு கடவுளுக்குத் தான் நன்றி சொல்லவேண்டும்." என்று அப்பந்து தங்கத்தின் நிறம்போன்றிருந்த பம்பரத்திடம் சொல்லியது.

"நான் ஒருவகை உயர்ரகப்பொருளால் செய்யப்பட்டவள். ஒரு கன்னிப்பெண்ணின் கைகளால் தைக்கப்பட்டவள். எனது வாழ்க்கையில் ஒருதடை இருக்கிறது.ஆனால் அதை ஒருவராலும் கண்டுபிடிக்கமுடியாது. நான் ஒரு பறவையை திருமணம் செய்வதற்கு தயாராக இருந்தவேளையில் கூரையின் பீலிக்குள் விழுந்துவிட்டேன். 5வருடங்களாக நான் அதற்குள்தான் இருந்தேன். அதுஒரு மிகநீண்ட காலம்தான். நான் இப்போதும் கன்னிப்பெண்ணாகவே இருக்கிறேன்" என்று அப்பந்து மேலும் கூறியது.

பம்பரம் எதுவுமே சொல்லவில்லை. அது தனது பழையகாதலியை நினைத்துக்கொண்டது.பந்து சொல்லியவற்றைக்கேட்டவுடன் அதுதான் தனது பழைய காதலி என்று தனக்குள் தெளிவுபட்டுக்கொண்டது.

வேலைக்காரச்சிறுமி குப்பைகளை அகற்றுவதற்காக அங்குவந்தபோது அந்த தங்கநிறமான பம்பரத்தைக் கண்டு மகிழ்ச்சியுடன் எடுத்துக்கொண்டாள்.

பம்பரம் மிகக்கவனத்துடனும் மதிப்புடனும் திரும்பவும் அந்தவீட்டின் வரவேற்பறைக்கு வந்துசேர்ந்தது.

அதன்பிறகு பந்தைப்பற்றி எவரும் எதுவுமே அறியவில்லை.

பம்பரமும் தனது பழைய காதலைப்பற்றி அதன்பிறகு ஒருபோதுமே பேசிக்கொள்ளவில்லை ■



www.padippakam.com

மலர்தல்
வாடல்
தெரிதல்........................................................பூமி....




வீடு.
இதனைப் பதி என்றும் அழைப்பர்.
"பிறக்கும்போது பத்தாவது இடத்தில் வியாழன்....
அதனால் பதியைவிட்டு எழுப்பிவிடும்" என்றது சோதிடம்.
அதில் எனது அம்மாவுக்கு அசையாத நம்பிக்கை.
ஆனால் அயல்நாட்டு இராணுவம் எனது வீட்டுக்குள் வந்ததனால்தான் நான் எனது பதியை இழந்தேன் என்ற உண்மைதான் எனது நம்பிக்கை.

எப்படியோ எனது வீட்டை இழந்தேன் நான்.
இப்போது புகலிடமான நிழல் டென்மார்க்கில் வாடகைவீடு தேடி .....பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டி சலிப்பு;
ஒரு கோட்டுச்சித்திரும்போல.

ஆறு நேர்கோடுகளைப்போட்டுக் காண்பதோ ஒருவீடு!

பத்திரிகைகளிலிருந்து கிடைத்த பலதொலைபேசி இலக்கங்களுடன் கதைத்துவிட்டேன்.
தலையாட்டிவிட்டார்கள்.

அவர்களுக்குத் தேவைப்படும் அத்தகைமைகளை என்னால் இனியும் ஏற்படுத்திக்கொள்ளமுடியாது.

ஏனெனில்.....
அவர்களை உறுத்தும் எனது கறுப்புத்தோலை எங்ஙனம் கழட்டி எறிவேன்?
எனது பிறப்புத் தந்த இனத்தின் பெயரை எந்தப் புதருக்குள் எப்படி மறைப்பேன்.

எப்படியும் "வாடகைக்கு வீடு" அகப்படும் என்ற நம்பிக்கை மட்டும் அகலவில்லை.

இப்போதெல்லாம்.......நான் எனது குழந்தைப்பருவத்தில் கட்டி விளையாடிய "மணல்வீடுகள்" பற்றிய ஞாபகம் வரும்.
மாலைவேளை. முற்றத்து மணலில் அழகான வீடொன்றைக் கட்டிவிடுவேன்.
தூரநின்று பார்த்துமகிழ்வேன். உள்ளே நுழையமுயன்று அந்தச் சிறியவீட்டிடம்



படிப்பகம்

www.padippakam.com

தோற்றுப்போவேன்
அப்போதெல்லாம் கற்பனையில் எனதுமனம் மட்டும் வீட்டுக்குள் சென்று சந்தோசத்தோடு திரும்பிவரும்.
வேலியில் விளையாடும் பூக்குடியான் குருவியை எனது வீட்டுக்குள் விருந்தாளியாக அழைப்பேன். அது பறந்துவிடும்.
இராக்களில் எனது மணல்வீட்டிலேயே தூங்குவதாக சஞ்சரித்தபடி தூங்கிவிடுவேன்.
பலவேளைகளில் அந்தப் பூக்குடியான் குருவி அந்தவீட்டுக்குள் படுத்திருக்கக் கனவு வரும்.
காலையில் பார்த்தால்
மாடு எனது மணல்வீட்டை உழக்கிக் கொண்டுபோயிக்கும்.
ஒருமணல்வீடா? எத்தனை அழகான மணல்வீடுகள்......
எனது குழந்தைக்கையால் குவித்த மணல்வீடுகள்.
ஒருமுறை பாம்பொன்று எனது மணல்வீட்டின்மேல் அரைந்த தடயத்தை கண்டேன்.
இன்னொரு வீட்டை இரவுமழை அள்ளிக்கொண்டு போயிருந்தது.
தேங்காய் விழுந்து நசிந்துபோன மற்றொரு வீடு.
வீட்டுநாய் கிண்டிப்படுப்பதற்கும் எனது மணல்வீடுகள் நாய்களின் நகக்குறி சுமந்தன.
ஆனால் எனது பிஞ்சுமனது எதிர்பார்த்த அந்த வேலியோரத்து பூக்குடியான் குருவியின் காலடிகளை எனது மணல்வீட்டு முற்றத்தில் நான் கண்டதேயில்லை.

அன்று ஒரு புதன்கிழமை.
வாடகைக்கு ஒரு வீடு.தொலைபேசி இலக்கங்களுக்குள் விரல்விட்டேன்.
எதிர்முனையில் ஒருவன் பேசினான்.
வீடு பார்க்க வரச்சொன்னான் சந்தோசப்பட்டுப்போனேன்.
திரும்பத்திரும்ப....அவனிடம்
நான் யார்? எனது நிறம்,மொழி,இனம்,நான் எந்த நாட்டவன்? என்று எல்லாவற்றையும் சொல்லிச் சொல்லி உறுதிப்படுத்திக் கொள்கிறேன்.
எப்படி இருந்தாலும் அவன் எனக்கு வாடகைக்கு வீடுதர விரும்பினான்.

முதலில் வீட்டைப் பார்க்கவேண்டுமல்லவா?
நல்ல குளிர்.
வீதிகள் பனியால் உறைந்துபோய் கிடந்தன.
சறுக்கிச்சறுக்கி வந்து பேரூந்தைப்பிடிக்கிறேன்.
மணி மாலை 5. வீதிவிளக்குகள் விம்மின.
அவனது வீட்டை தட்டுகிறேன்.
எதிர்பார்த்திருந்தவன் கார்ச்சாவியோடு வெளியே வருகிறான்.
இருவரும் காரில் செல்கிறோம்.
புகைகளை கக்கிக்கொண்டிருக்கும் வீட்டுக்கூட்டங்களை எல்லாம் தாண்டி அவனது கார் செல்கிறது.ஒரு வயல்வெளியினூடே கார் தொடர்ந்து செல்கிறது.
"ஒதுக்குப்புற வீடுபோல......" என்று எனக்குள் நினைத்துக்கொள்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

இருவரும் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை.
கார் போகிறது.
மண்ணிறமும்,கறுப்பும் மஞ்சளுமாக குளிரில் எரிந்த புற்களுக்கிடையே தேங்காய்ப்பூப்போல பனிதூவிக்கிடக்கும் ஒரு புல்வெளியில் இறங்கச்சொல்கிறான்.
என்னோடு அவனும் இறங்கிக்கொள்கிறான்.
வாழ்க்கை புதிாக தொடங்கப்படப்போகும் எனது வாடகை வீட்டை அந்த குளிர்நிறைந்த இருட்டிடை தேடுகிறேன்.
அவன் சுட்டிய திசையில் வீட்டைத் தேடுகிறேன்.
"அதோ உனது வீடு" என்கிறான்.
அவனது வாயிலிருந்து ஆவி புகைந்தது.
"எங்கே" என்றுகேட்கிறேன்; இருளை கண்களால் விலக்கியபடி.
பெரியதொரு இருள்வெளி மட்டுமே எனது கண்களுக்குள் தெரிகிறது.
இல்லாத ஒரு வீட்டைகாட்டி என்னை ஏய்த்த அந்த மனிதன் தனது காரை உறுமிக்கொண்டு பறக்கிறான்.
நின்றேன்.
அந்த இருள்வெளியில் வெண்பூத்தூவும் வானம்.
ஆகாயம் எனது வீடாயிற்று.
வாடகை இல்லாத செல்வம்.
எல்லையில்லாத வாழ்வு.
தடையற்ற பார்வை.
குருவிகளும், பறவைகளும் மட்டும் எனது வீட்டுக்குள் வந்துபோகலாம்.
வளர்மதி எனது காதலி.
சூரியன் எனது புதல்வன்.
நட்சத்திரங்கள் எனது தோழர்கள்.
காற்றே எனது ஆகாரம்.
"நல்லவீடு".....எனது வாய் உச்சரித்துக்கொள்கிறது.
திரும்பவும் நடக்கிறேன்.வந்த இடம்நோக்கி.
எனது மணல்வீடுகளுக்கு அந்த வேலியோரத்துப் பூக்குடியான் குருவி ஏன் வரவில்லை என்பது மட்டும் லேசாகப் புரிந்தது.
தொடர்ந்து நடக்கிறேன்.

## ஒரு வீடு செய்தல்



கொஞ்ச மண்ணும்,
சிறிது மூலிகையும்,
சொட்டுத் தண்ணீரும்
ஆயிரமாயிரம் கிலோமீற்றர்
முட்கம்பிகளும்
எடுத்தொருநாள்
எனக்கென ஒரு வீடுசெய்கிறேன்.
நான் இதை "ஈராக்"
என அழைக்கவேண்டாமோ?

'டென்மார்க்கில் அகதியாக இடம்பெயர்ந்த Muniam Alfaker என்ற ஈராக்கிய கவிஞனது கவிதைத்தொகுதியிலிருந்து.'

தோப்புக்கரணங்கள் தொடர்கதை இடவசதியின்மையால் இந்த இதழில் இடம்பெறவில்லை. அடுத்த இதழில் அத்தொடர்கதை அதிக பக்கங்களுடன் முடிவுபெறும்.
தை–1996 லிருந்து
'சரியாசனம்' என்கின்ற புதிய நெடுங்கதைத் தொடர் ஒன்று ஆரம்பமாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# ஆந்திரே

டெனிஸ்கறு

சென்ற இதழின் தொடர்ச்சி

தமிழில்: லெவண்யா.

அப்போது நாங்கள் எல்லோரும் வரவேற்பு அறையில் ஒன்றாக அமர்ந்திருப்போம். அப்பா எப்போதும் அரசியல், வாகனங்கள் போன்ற ஆண்களின் விடையங்கள்பற்றியே அவனுடன் அலட்டிக்கொண்டிருப்பார். அத்துடன் அங்கு எலிசபெத் ஊசியும் நூலுமாக அமர்ந்து ஏதாவது பின்னிக்கொண்டிருப்பாள். அங்கு எவருமே பெரிதாக என்னுடன் பேசிக்கொள்வதில்லை. நான் வழமையில் ஆந்திரேக்கு அருகாமையில் சோபாவில் அமர்ந்திருப்பேன். ஒரேயொரு தடவைதான் அவனுடன் தனியே இருந்து கதைக்கும் வாய்ப்புக் கிட்டியது. அப்போது அவனுடன் கதைத்தவாறே இயலுமான அளவுக்கு அவனின் கண்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவை மண்ணிறமானவை. அத்துடன் அறிவு நிறைந்தவை.

பரீட்சை அண்மித்துவிட்டமையால் வாரத்துக்கு இருமுறை என்ற வழமையை விட்டு வாரத்துக்கொருமுறை ஆந்திரே வர ஆரம்பித்தான். வீட்டில் எலிசபெத் பற்றியே எல்லோருமே அக்கறை செலுத்தினார்கள். என்னைப் பற்றி எவருக்குமே கவனமிருக்கவில்லை. ஆனாலும் என்னுடைய பாட்டில் நான் எனது பாடங்களைப் படித்துக் கொண்டேன்.

சில நேரங்களில் வீட்டில் என்னால் இருக்கவே முடியாதிருக்கும். எங்கள் வீடே எனக்கு மிகவும் அந்நியத்தனமாக இருக்கும். அந்நேரங்களில் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு நான் வெளியே புறப்பட்டுவிடுவேன். எங்கே போகிறாய் என்று எவரும் என்னை கேட்பதுமில்லை. நான் எங்கே போகிறேன் என்று எவருக்கும் சொல்லுவதுமில்லை. நான் என் சிநேகிதிகள் எவரிடமாவது செல்லுகிறேன் என்று அவர்கள் நம்பியிருக்கக் கூடும். ஆனால் அவ்வாறு எல்லாம் நான் போது மிகவும் குறைவு. கூடுதலாக கடற்கரைப்பக்கம் போவேன். ஓரமாக சைமிக்கிளை நிறுத்திவிட்டு கடல்நீர் காலில் படும்வகையில் சிறிது நேரம் நடந்து கொண்டிருப்பேன். பின் ஈரமான அந்த மணலில் அமர்ந்து கொண்டு என்னைப் பற்றியும் என் கவலைகள் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருப்பேன்.

அது ஒரு மேமாத மாலை நேரம். சினிமாப் படம் பார்க்க அப்பா எனக்கு பணம் தந்தார். எனக்கு தலைகால் தெரியாத சந்தோசமாக இருந்தது. ஏனெனில் என் அப்பா என்னை அழைத்து எனக்கு பணம் தந்திருக்கின்றார். புறப்படமுன்னர் என்னிடம் இருப்பவற்றுள் வடிவான ஒரு சட்டையை அணிந்து கொண்டேன். என் சந்தோசங்களின் மத்தியில் ஒரேயொரு விடையம் மட்டும் மனதுக்குள் இருந்து அரித்துக்கொண்டிருந்தது. அது என்னவெனில் நான் புறப்படும்போது எலிசபெத்



படிப்பகம்

www.padippakam.com

என்னைப்பார்த்து சிறிதும் பொறாமைப் படவில்லை. பதிலாக புன்னகையுடன் வழி யனுப்பி வைத்தாள்.

படம் மிகவும் நகைச்சுவை தழுவியதாக இருந்தது. படம் முடிந்துவரும் போது உற்சாகமான மனநிலையுடன் இருந்தேன். நகரசபை சதுக்கத்தைத் தாண்டி நடந்து கொண்டிருக்கும் போது பின்னால் எவரோ கூப்பிடுவது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தால் அங்கு ஆந்திரே வந்து கொண்டி ருந்தான். எனக்கு சந்தோசமாகவும் அதே நேரம் தடுமாற்றமாவும் திகைப்பாகவும் இருந்தது.

„நான் உன்னைப் புகையிரதநிலையம்வரை கொண்டு வந்து விடுகின்றேன். வழியில் இருக்கும் ரிவோலியை விரைவாக பார்த்து விட்டு செல்வோம். என்ன?"

நான் சம்மதித்தேன். அவனுடன் ஒன்றாக நடந்து செல்லுவது எனக்குப் பெருமையாக இருந்தது. அதற்கு முதல் என் அப்பா அம்மாவுடன் ரிவோலிக்கு சென்றிருக்கிறேன். ஆனால் ஆந்திரே போன்ற வாலிபனுடன், அதுவும் ஒருபிந்திய பின்னேரப்பொழுதில் ரிவோலிக்கு சென்றது என் வாழ்வில் அதுதான் முதற்தடவை. நாம் வாயிலில் அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தோம். பலவிதமான வர்ண விளக்குகள் அங்கே மின்னிக்கொண்டிருந்தன. நான் ஒரு சிறுமியாக இருந்தது மிகவும் நல்லதாக போய்விட்டது என்று எண்ணிக் கொண்டேன். இல்லையெனில் ஆந்திரே இவ்வாறு அழைத்துவருவதற்கோ, என்னை சந்தோசப்படுத்த வேண்டும் என்று அவன் விரும்புவதற்கோ சந்தர்ப்பம் இருந்தி ருக்காது. அவன் எனக்குமுதலில் ஐஸ்கிறி மும் பின் வேறுவகையான சிற்றுண்டி வகைகளும் வாங்கித்தந்தான். ஆனால் தனக் கென்று எதனையும் வாங்கிக்கொள்ளவில்லை. நாங்கள் அங்கிருந்த வாங்கில் ஒன்றில் அமர்ந்தோம். நான் ஐஸ்கிறீமினை வாய் முகமெல்லாம் பிரட்டிச் சாப்பிட்டுக் கொண்டி ருக்கும் போது அவன் என்னை பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்குப்பின் மீண்டும் நாங்கள் எழுந்துநடக்க ஆரம்பித் தோம். அவ்வளவு நேரமுமிருந்த சந்தோச மும் உற்சாகமும் அப்போது மறைந்து போய் கவலைகள் பழையபடிவந்து மனதில் அமர்ந்து கொண்டன. இறுதியாக பிரதான புகையிரநிலையத்தை அடைந்தோம். அங்கு வாசலைத் தாண்டிச் செல்லும் போது அவன் கேட்டான்.

„எப்படி எலிசபெத் இருக்கிறாள்?"

இனி அடுத்த வாரம்தான் ஆந்திரேயை எங்கள் வீட்டுக்கு வருவான். இவன் இடையில் தொலைபேசி மூலமும் அவளுடன் தொடர்பு கொள்ளப் போவதில்லை. ஏனெனில் எலிசபெத்தின் பரீட்சை நெருங்கிக் கொண்டி ருப்பதால் அவளைத் தொந்தரவு செய்ய அவன் விரும்ப மாட்டான். இவ்வளவையும் விரைவாகத் தீர்மானித்துக்கொண்டு அவனின் வினாவிற்கு விடையளிக்க ஆரம்பித்தேன்.

„அவளுக்கென்ன அவள் நல்லாக இருக்கின் றாள். நான் நினைக்கின்றேன். அவளுக்கு விரைவில் நிச்சயார்த்தம் நடக்கலாம் என்று ஆனால் இந்த விசயத்தை இதுவரைக்கும் வீட்டில் இரகசியமாகத்தான் வைத்திருக் கிறார்கள்."

நான் சொன்னது அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும்.

„நிச்சயதார்த்தமோ?"

„ஆம்" என்று கற்பனையில் மேலும் பேசிக் கொண்டிருந்தேன்.

„அப்பாவின் தலைமைக் குமாஸ்தாவை உனக்குத் தெரியும் தானே?"

ஆந்திரே அவனை ஒரிருதடவைகள் எங்கள் வீட்டிற் சந்தித்திருக்கிறான். அத்துடன் ஆந்திரேக்கு அவனை அவ்வளவுபிடிக்காது.



படிப்பகம்

www.padippakam.com

நான் என்னுடைய பொய்யை நம்பச்செய்வதற்கு இன்னும் சில பொய்கள் சொல்ல வேண்டியிருந்தது.

„எலிசபெத்தும் அவனும் ஒருவரையொருவர் விரும்புகிறார்கள். அவளின் படிப்பு முடிய அவர்கள் நிச்சயதார்த்தம் இடம்பெறும்."

„உண்மையாகவா?" என்று அதிர்ச்சியுடனும் கவலையுடனும் ஆந்திரே வினவினான்.

அதன்பின் அவன் எதையோ சொல்லுவதற்காக வாயை உன்னும்போது எனது புகையிரதம் வந்து நின்றது. நான் விரைவாக அவனிடம் விடைபெற்றுக் கொண்டு நான் புகையிரதத்தில் ஓடி ஏறினேன்.

அடுத்த நாள் நானும் எலிசபெத்தும் எங்கள் அறையில் அமர்ந்திருந்து எங்களெங்கள் பாடங்களை படித்துக் கொண்டிருந்தோம். எலிசபெத் தனது புத்தகத்தைப் பார்ப்பதைக் காட்டிலும் அதிகளவில் யன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆந்திரே வருகின்ற நாள் வர இரண்டு நாட்கள் இருந்தன. நீண்ட காலத்தின் பின் நான் ஆந்திரேயைப்பற்றி அவளுடன் பேச ஆரம்பித்தேன்.

„எலிசபெத்" என்று நான் அழைத்தபோது அவள் தன் கண்களை என் பக்கம் திருப்பினாள். அந்தக் கண்களில் ஆந்திரேயும் ஆந்திரே கற்பித்த லத்தீன் சொற்களும் வலம்வந்து கொண்டிருந்தன.

„நான் நேற்று ஆந்திரேயையும் அவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணையும் சந்தித்தேன்"

„நிச்சயிக்கப்பட்ட பெண்ணா? அப்படி அவனுக்கு யாருமில்லையே."

„உனக்கு விசயமே தெரியாதா? அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் கனகாலமாக விரும்புகிறார்களாம்"என்று எனது கற்பனையில் நானே ஒன்றிப்போய் நானே விபரிக்க ஆரம்பித்தேன். பின் எலிசபெத் எதுவுமே பேசவில்லை.

அவள் ஆந்திரே பற்றிய எண்ணங்களை முடிவுக்குக் கொண்டு வர முயலுகிறாள் என்பதனை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

„அவள் மிகவும் அழகாக இருந்தாள்" என்று நான் மேலும் தொடர்ந்தேன்.

„எனக்கு அது தேவையில்லை. மேலும் உனது கதைகளைக் கேட்க எனக்கு நேரமுமில்லை."

அன்றைய மீதிப் பொழுதுகளில் அவள் எவருடனும் பேசிக்கொள்ளவில்லை. எனக்கு அன்றிரவு அதிக நேரமாகத் தூக்கம் வரவில்லை. நான் செய்த தவறுகளை எண்ணி எண்ணி அழுது கொண்டிருந்தேன். என் வாழ்வில் அன்றுதான் முதற்தடவையாக அதிகமாக அழுதிருப்பேன். இறுதியாக நான் எழுந்து எலிசபெத் உறங்கிக் கொண்டிருந்த கட்டிலுக்குச் சென்றேன். என்னுடைய தவறுகளால் நாம் இருவரும் ஆந்திரே தொடர்பாக கவலைகளை சந்திக்க வேண்டிவந்துவிட்டது. நான் மெல்லக் குனிந்து அவள் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தேன். என் கண்களில் இருந்து திரண்டு வந்த நீர்த் துளிகள் அவளது உதடுகளில் விழுந்தன.

அடுத்த நாள்

தனக்கு இனி ஆந்திரேயின் உதவி தேவையில்லை என்றும் தன்னால் சுயமாக சமாளித்துக் கொள்ளமுடியும் என்றும் எலிசபெத் அப்பாவிடம் கூறினாள். தனது செலவுகள் குறையப்போகிறதே என்பதில் அப்பாவுக்கு அலாதியான சந்தோசம். அப்பாவும் ஆந்திரேயுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விடையத்தைக் கூறினார்.

(முற்றும்)



படிப்பகம்

www.padippakam.com

## நாளும் போகும்

சன்னதமாடி

மாலையில் கோர்த்து
வைக்க :
பூக்களெல்லாம் ;
மரணித்தே போயின .

●

சோவியத் மாலையின்
சிகப்பு நார்
புரிதேய்ந்து போக . .
சில பூக்கள்
சுதந்திரம் கேட்டன .

●

சம்மட்டிக்கும் அருவாளுக்கும்
சுதந்திரப் போர் .
செச்னியா . . லெத்வியா . . .
வண்டுகளின் வாயிலும்
இரத்தம் .

●

கம்யூனிசம்
தாலி அறுக்க . .
போட்டிச் சந்தை
ஐரோப்பாவுக்கு :
பன்னிரண்டு பவுணில்
புதுத் தாலி .

●

அது பூமாலை . . !
இதுவோ
நட்சத்திர மாலை .
நார்களில் தான்
பேதமில்லை .

●

மாலைகள் கழுத்தை
முறித்தால் :
சுதந்திரம் வாளெடுக்கும் !
நார்களுக்குப் புரியாவிடில்
போர்கள் தான் .

**வெளிவருகிறது**
**கே.எஸ். துரை அவர்களின்**

## "ஒரு பூ"



"சுயம்வரம்" என்கின்ற நாவலை டென்மார்க்கிலிருந்து வெளியீடுசெய்த வரும்,தற்கால புலம்பெயர் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுவருபவர்களில் ஒருவருமான திரு. கே.எஸ்.துரை அவர்கள் எழுதிய "ஒரு பூ" என்கின்ற சமூகநாவல் அச்சுவாகனம் ஏறிக்கொண்டிருக்கின்றது.

"மூன்றாண்டு காலம் எடுத்து சேகரிக்கப்பட்ட தகவல்களோடு எழுதி வெளிவரத்தயாராகிக்கொண்டிருக்கும் நாவல் என்றும், தாயகமண் உங்கள் காதோடு பேசும் கதைச்சுவை என்றும், புதியசெய்திகளோடு இதோ வாசகர்களை சந்திக்கின்றேன்"
என்று நூலாசிரியர் குறிப்பிடும்போது "ஒரு பூ" நாவலை நாமும் வாசிக்க வேண்டும்போலுள்ளதல்லவா!

விற்பனைத்தொடர்புகளுக்கு உங்கள் நாடுகளிலுள்ள TCC க்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
பிரத்தியேகமான மேலதிகத்தொடர்புகளுகளுக்கு ........
Fruehøjvej 10,2.th
7400 Herning,Denmark
தொலைபேசி:45+ 97 21 54 25




படிப்பகம்

www.padippakam.com

# கண்ணீர்

வை.சி.சிவநாதன்




எலும்பை அறுக்கும்
குளிருக்கு அஞ்சி
பறவைகள் பறந்தன
ஈழத் தேசம்.

இரவுநேர
கடைசிபஸ்ஸை தவறவிட்டவள்போல்
எதிர்வீட்டு ஜன்னலருகில்,
தோப்பை இழந்த
சிறுபறவை –ஒன்று
குளிரில் கூனிக்குறுகி.....

எலும்பை அறுக்கும்
குளிருக்கு அஞ்சி
பறவைகள் பறந்தன
ஈழத் தேசம்.

மேலைத் தேசம்
வந்த பனைமரங்களோ
தோப்புக்காக ஏங்க!
காவோலைக்கும் + காவோலைக்கும்
குருத் தோலைக்குமிடையே
மூண்டது விவாதம்.
விவாதம் சன்னதமாடியது.
விவாதம் தத்துவம் வேண்டியது.
விவாதம் அகம் + புறம் [illegible]

எதிர்வீட்டு ஜன்னலினுள்
சிலையாக ஒருபூனை;
கண்கள் வெட்டாமல்!
இரத்தம் உறையும் –குளிருடன்
வாதாடும் சிறு பறவை தன் இயலாமையால்
கண் சொருக.......
கண்ணீர் வடிக்க மட்டும்
கண்களை வெட்டித் இறந்தது.



படிப்பகம்

www.padippakam.com



# சண்முகமேஸ்திரி

கே. எஸ். துரை

*" இருட்டு . . கும்மிருட்டு . . பேரொளியே விரைந்து வா ! " நிறையப் பேர் இப்படித்தான் ஓலமிடுகிறார்கள். ஆனால் சிலர் இருள்குறித்துச் சலிப்பதில்லை. பேரொளிக்குக் காத்திருப்பதுமில்லை. இருள்கண்ட இடத்தில் சிறு மெழுகுவர்த்தியை ஏற்றிவிடுவார்கள். இவர்களை உலகு சாதாரண மனிதர்களாகக் காணலாம். ஒளியின் மறுபக்கம் இருள் என்பது போல: மகத்துவத்தின் இன்னொரு பக்கமே சாதாரணமாகும். மண்ணையும், சர்க்கரையையும் கலந்து வீசினாலும்: மண்ணை நிராகரித்து, சர்க்கரையைத் தூக்கிச் செல்லும் சிறு எறும்பு. இதுபோல ஒவ்வொரு சாதாரண மனிதரிலுமுள்ள மகத்துவங்களைத் தேடி நடப்பதே இச்சிறு தொடர்.*

" இருந்து பாருங்கள் இலங்கைத் தீவையும் தாண்டி இவன் பெயர் ஒலிக்கும். " இவனைப்பற்றி முன்பே சிலர் இப்படிக் கூறியிருந்தார்கள்.

சண்முகமேஸ்திரி —

" முதன்முதலாக நீர்மூழ்கிக் கப்பலைக் கட்டிய தமிழன். கப்பல் கட்டும் தொழில் நுட்பத்திறனில், அதன் நுண்பாக அறிவில் ஒப்பாரும் மிக்காருமற்றவன். அவன் திறமை சாதாரணமானதல்ல : இன்றைய பொறியியலாளர்களையெல்லாம் தூசுபண்ணிவிடும். சென்னைச் சிறைச்சாலையை நுட்பமாக உடைத்தெறிந்த திறமைசாலி ! " இவ்வளவு புகழாரத்தையும் எழுதியதும், ஒளிபரப்பியதும் வேறுயாருமல்ல இந்தியப் பத்திரிகைகளும், தொலைக் காட்சிகளும்தான்.

அன்று இவனைப்பற்றிச் சொன்னவர்களின் கணிப்புகளையும் தாண்டி இலங்கையும் : இந்தியாவும் மட்டுமல்ல: உலகமே அவனை ஒருநாள் நின்று பார்த்தது. அந்த நாள் : அந்த மாபெரும் திறமைசாலி உரிமை கொண்டாட ஒருவருமற்ற சடலமாக கூவம் ஆற்றங்கரையில் கிடந்தான்.

தீபத்தை குன்றின்மேல் வைத்தால்தான் அதன் ஒளி பரவும். குன்று என்பது நாடு. தீபம் என்பது திறமை. குன்றின்மையால் புகழ் பெறத்தவறிய தமிழ் விளக்குகளில் சண்முகமேஸ்திரியும் ஒருவன்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் சண்முகமேஸ்திரி எனக்கும் பாடசாலைத் தோழனானான் —

அன்றிலிருந்து அவன்திறமையை: அவனுள் புதைந்து கிடக்கும் அபாரசக்தியை, அவன் நிகழ்த்திய சாதனைகளை ஒவ்வொரு பொழுதும் கூர்ந்து பார்க்கும் வாய்ப்புப் பெற்றேன்.

சண்முகமேஸ்திரியின் வாழ்க்கைச் சித்திரத்தை அழகாகச்செதுக்கி, சுடச்சுடக் கையிலெடுக்க வேண்டுமென்றால் முதலில் இரண்டொரு சம்பவங்களை பின்னணிக் காட்சிகளாகத் தீட்டவேண்டும்.

முதலாவது பாக்குநீரிணையின் வரலாற்று முக்கியத்துவம் —

இந்தியாவையும் , இலங்கையையும் பிரிப்பது



படிப்பகம்

www.padippakam.com

பாக்குநீரிணை என்றே இன்றுவரை படித்து வருகிறோம். அது தவறு. இந்தியாவிலிருந்து இலங்கையைப் பிரித்தெடுத்த மூலசக்தியே பாக்குநீரிணை! என்று திருத்திக்கொள்ளுங்கள்.

சிங்களத்திற்கும், தமிழீழத்திற்கும் ஒரு பிரிவினைக்கோடு போடப்போவது இன்றைய ஈழப்போர் என்றால்: அதற்கு முன் இந்திய உப கண்டத்திலிருந்து இலங்கைத் தீவைப் பிரித்தாகவேண்டும். முடிந்து போன இந்த வரலாற்றுப் போரை நிகழ்த்தியது மனிதர்கள் அல்ல : இயற்கை. அதன் ஆணையை நிறைவேற்றி வைத்த விடுதலை வீரனே பாக்கு நீரிணை.

இப்படித்தான் நமது கடலோடிகள் பாக்கு நீரிணையை நேசித்தார்கள். தன்மானத்தோடு கப்பல் கட்டினார்கள். இரத்தம் சிந்தினார்கள். அன்னபூரணிக் கப்பலில் ஏறி அமெரிக்கக் கரையையும் தொட்டார்கள்.

கப்பல் கட்டும் கலையில் அபார சாதனைகளைப் புரிந்த மேஸ்திரிகள் எண்ணற்றவர்கள். இவர்களில் குறிப்பிடக்கூடிய ஒருவர் துரைமேஸ்திரியார்.

நெட்டையான தோற்றங்கொண்ட மிகப் பழைய மனிதர். கள்ளை வார்த்துவிட்டால் வீதியல் நின்று ஒற்றைக்காலில் நடனமாடுவார். அவரிடம் வேலைகளை ஒப்படைத்தால் பிறகு பிட்டுக்கு மண் சுமந்த கதையாகிவிடுமென்று, முதலுடையவர்கள் நெருங்கவே பயப்படுவர்.

ஆனால் வள்ளங்கள் செய்வதில் அவர் ஒரு மேதை. கடைசியாக ஒரு வள்ளம் செய்தார். அதைச் சிறுவனாக இருக்கும்போதே தவறாது பார்த்து வந்தேன்.

வள்ளத்திற்கு ஏரா ஓடுவதிலிருந்து, அணியம்வைப்பது, வங்குக்கால் போடுவது, பின்அணிய வடிவமைப்பு, பவுண்டேசன் அமைப்பது என்று ஒவ்வொரு வேலையையும் அணுவணுவாக இரசித்துச் செய்யும் கலை வெறியன்.

செய்து முடித்தாலும், உடனே மையூசுவதற்கு அனுமதிக்க மாட்டார். கண்களை மூடியபடியே முழுவள்ளத்தையும் பல நாட்களாகத் தடவிக்கொண்டேயிருப்பார். சுற்றிச் சுற்றி வலம்வருவார். சில இடங்களில் அடையாளம் போடுவார். அவ்விடங்களில் மறுபடியும் பலகை மாற்ற வேண்டும், அல்லது சீவுளி போடவேண்டும்.

நீரைமட்டுமல்ல : காற்றையும் கிழித்துக் கொண்டே வள்ளம் கடலில் ஓடவேண்டும். இதற்கான காற்றுப் பரிசோதனையை செய்யும் வல்லமை பெற்றிருந்தவர் அக்காலத்தில் துரை மேஸ்திரியார் ஒருவர் மட்டுமே.

எல்லோருக்கும் எல்லாவற்றையும் சொல்ல முடியாது. சொன்னாலும் எல்லோராலும் விளங்கவும் முடியாது. மேஸ்திரியார் மௌனமாக வேலைசெய்வார். மற்றவர்கள் தமது அறிவுக்கேற்ப அவரைப் பைத்தியக்காரனென்று திட்டுவார்கள். ஆனால் வள்ளம் கடலில் இறங்கிவிட்டால் போதும்: எல்லோர் கோபங்களுமே காற்றெனப் பறந்துவிடும்.

200 குதிரை சக்திகொண்ட மேலைத்தேயப் படகுகள் நான்கு பக்கங்களாலும் சுற்றி வந்தாலும் துரைமேஸ்திரியின் நூறு குதிரை சக்திகொண்ட வள்ளம் அவற்றுக்கெல்லாம் வேப்புக்காட்டி மறையும்.

அவர் செய்த கடைசி வள்ளம் இந்தியக் கடற்படைக்கும் : இலங்கைக் கடற்படைக்கும் தண்ணிகாட்டிவிட்டு , ஒரு வாரத்தில் பதினைந்து தடவைகள் பாக்கு நீரிணையை அங்குமிங்குமாகக் கடந்து காட்டியது.

எந்தப் பல்கலைக்கழகமும் உரிமை பாராட்ட முடியாத இந்த அறிவை துரைமேஸ்திரி எங்கிருந்து பெற்றார் ? இதுவே நம் முன்னோர் அளித்த அரும் செல்வமாகும். இப்பேற்பட்ட துரைமேஸ்திரியின் இடைவெளியை நிரப்ப ஒரு திறமைசாலி வருவானா?

மிகக்கடினம். ஆனால் எல்லாத் தடைகளையும் உடைத்துக்கொண்டு அந்த இடத்திற்கு ஒருவன் வந்தான் அவனே சண்முகமேஸ்திரி .



படிப்பகம்

www.padippakam.com

ஐந்தடி ஒரு அங்குலம். வைக்கோல் பிடிபோல கற்றை கற்றையான தலைமுடி. உப்புத்தண்ணிக் கரிப்பில் கறுத்ததோல். நாவல் தடிபோல உறுதி. கரையைத் தொட்டுவிட ஓடும் ஓய்வில்லாத அலைகளின் முயற்சி. குழந்தையுள்ளம். பிடிவாதமும் அதுபோலவே —

75ம் ஆண்டுகளின் தொடர்ச்சி ... அப்போது அவனுக்கு 20 வயது மட்டுமே. அக்காலத்தில் ஒரு மேஸ்திரி வருடத்திற்கு ஒரு வள்ளம் செய்வதே பெருத்தபாடு. அந்த மந்த கதிக்குள் இயந்திரத்தைப் பூட்டி ஓடவைத்தவன் சண்முகமேஸ்திரி. அக்காலத்திலேயே அவன் கைகளிலிருந்து மாதமொரு வள்ளம் பாக்குநீரிணையில் கிடுகிடெனப் பாய்ந்தோடியது.

வள்ளம் என்பது பெரிய உருப்படி. அதனால் அதைக் கடற்கரைக்கு அருகாமையில் வைத்துச் செய்வதே பல நூறுவருடங்களாக வழமை. ஆனால் சண்முகமேஸ்த்திரியின் வாடியோ கடற்கரையிலிருந்து சுமார் 2 கி. மீ . தொலைவில் இருந்தது. வள்ளத்தை இழுத்து வரும்போது வீதிப் போக்குவரத்தே தடைப்பட்டு பெரும் பாடாகிவிடும்.

இது ஒரு நீண்டகாலச் சிக்கல். எப்படித் தீர்க்கலாம் ? என்று எல்லோருமே தடுமாறியபோது அவனின் மூளையோ சட்டென ஒரு தீர்வைப் படைத்து வைத்தது.

பகுதி பகுதிகளாகப் பொருத்தி, வள்ளத்தையே தூக்கிச் செல்லக் கூடிய புதிய வாகனமொன்றைக் கச்சிதமாக உருவாக்கிக்காட்டினான். எல்லாத் திறமைசாலிகளுமே திகைத்தார்கள். நம்ப முடியவில்லை. ஆனால் மாட்டுவண்டியைவிட வேகமாக வள்ளங்களைப் படபடவெனத் தூக்கிச் சென்று கொண்டிருந்தது அவன் செய்த புதிய வாகனம்.

அவனின் இந்த எழுச்சிக் காலத்தில் ஒருநாள் —

அவுஸ்திரேலியாவில் உள்ள பிரபல கப்பல் கட்டும் நிறுவனமொன்று அவனுடைய சிறுவள்ளங்களின் அழகாலும், நேர்த்தியாலும் கவரப்பட்டது. மீன்பிடித்தலுக்காக அது போன்ற வள்ளங்களைத் தாமும் உருவாக்க ஆசைகொண்டு, அவனுடைய தொழில் நுட்பத்தைத் தருமாறு கேட்டனர்.

அப்போது நான் தொழில் முன்நிலைப்பாட ஆசிரியர். கேத்திரப் பொறிமுறை வரைதலைக் கற்பிப்பதிலும் ஆழமாக ஈடுபட்டிருந்த காலம். அந்த நிறுவனத்திற்கு வேண்டிய செய்முறைசார் தொழில் நுட்பப் படங்களை அவனுடைய வழிகாட்டலில் வரைந்தேன்.

படம் அவுஸ்திரேலியா சென்று, வள்ளங் கட்டுவதற்கான அழைப்பிதழ் வருவதற்குள் இரண்டொரு ஆண்டுகள் வேகமாக உருண்டோடிவிட்டன. அழைப்பு வந்தபோது அவன் ஈழமண்ணில் இல்லை. அவனுக்காக அவன் சகோதரரும் வேறொரு, மேஸ்திரியாரும் அவுஸ்திரேலியா சென்றனர். அங்கிருந்து எண்ணற்ற வள்ளங்களை உருவாக்கி நாடு திரும்பினர்.

இடையில் என்ன நடந்தது ? ஏன் அவன் நாட்டை விட்டு நீங்கினான் ? அதுவும் ஒரு சோகமான கதையே .

நமது கடலில் மீன்பிடிப்பதற்கு ஒரு நவீன ரோலரை எப்படி உருவாக்கலாம் ? மேலைத்தேய தொழில் நுட்பத்தை உடைத்துத் தகர்த்து, ஒரு பிரமாண்டமான ரோலரை உருவாக்கிவிடத் திட்டமிட்டான். கடினமாக உழைத்தான் உருவாக்கினான். இறுதியில் அதுவே வினையாக முடிந்தது.

பெரும் பொருளில் உருவாகிய அந்த ரோலர் பயன்தரமுன்னர். வேறுபல பொருளாதாரத் தொல்லைகள் விசுவரூபமெடுத்தன. பணம் கொடுத்த முதலைகள் அவனைக் கடியாய்க் கடித்தன. கடைசியில் அவனை நாட்டை விட்டே அகற்றுமளவிற்கு துயரமான நிலையும் வந்தது.

அவன் திண்டாடியபோது எந்த வங்கியுமே பணம் கொடுத்து, முயற்சியை ஊக்குவிக்க



படிப்பகம்

www.padippakam.com

முன்வரவில்ல. கைகொடுக்க முடியாத தங்கிவாழ் சமூகம் மௌனித்துக் கிடந்தது. அன்று போனவன் போனவன்தான்: அதற்குப் பிறகு நான் அவனை என்றுமே காணவில்ல.

இடையில் வந்த 15 ஆண்டுகள் இந்திய மண்ணிலிருந்து, அவன் பல மகத்தான சாதனைகளை நடத்தி முடித்ததாகப் பின்னாளில் அறிந்தேன். அதில் ஒன்றுதான் சிங்களத்தின் கடலாதிக்கத்தைத் தகர்க்க அவனால் கட்டப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்.

ஸ்ரீலங்கா அரசிடமோ நீர்மூழ்கிக் கப்பல்களில்லை.இந்தநிலையில் அவனின் நீர்மூழ்கிக் கப்பல் மட்டும் பாக்கு நீரிணையில் இறங்கியிருந்தால் எப்படியிருந்திருக்கும் ? மிகுதியை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன் —

உண்மையில் அவன் ஒரு கப்பல் கட்டும் மேஸ்திரி மட்டுமல்ல. வரலாற்றுச் சமுத்திரம் புவனசுந்தரம் மாஸ்டரின் மாணவனும் கூட. பிஸ்மார்க், மெற்றேணிச், கபூர் போன்ற மாபெரும் அரசியல்வாதிகளின் வாழ்க்கையையெல்லாம் எழுத்தெண்ணிப் படித்தவன். அப்பேற்பட்ட அறிவாளி இந்தியா, ஸ்ரீலங்கா அரசுகளின் ஊனப்பட்ட அரசியல் சித்து விளையாட்டுக்களை ஏன் சரிவர நிறுத்தெடுக்கத் தவறினான்? என்பதுதான் இன்றும் என்னுள் கவலைதரும் கேள்வியாகும். நிற்க —

இதுவரை கூறப்பட்டதெல்லாம் சான்றுள்ள உண்மைகளே! இனி வருவது சத்தியக் கடதாசி ! இதற்கோ சாட்சியம் இல்லை.

கடந்த மார்ச் மாதம் ஒருநாள் நள்ளிரவு. ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தேன். ஆழ் மனக்கிடங்கில் சண்முகமேஸ்திரி திடீரெனத் தோன்றினான். " ஐயோ என்னைக் காப்பாற்று ! " என்று அலறினான். திடுக்கிட்டு விழித்தேன். நேரம் சாமம் இரண்டு மணி.

பதினைந்தாண்டுகளாகக் கனவிலுமின்றி, கடிதத் தொடர்புகளுமின்றி, உறவறுந்து போன சண்முகவேல் இன்று மட்டும் ஏன் கனவில் வந்தான்? அவனுக்கு ஏதோ நடந்திருக்க வேண்டும் . அதிகாலை வரை விழித்திருந்தேன் —

இரண்டொரு நாட்களில் செய்தி கிடைத்தது.

சென்னை மத்திய சிறை உடைக்கப்பட்டது. கைதிகள் தப்பி ஓடினர். இருவர் சைனைட் அருந்தி மரணம் ! அதில் ஒருவன் சண்முகமேஸ்திரி. செய்திகள் இந்திய அரசையும், உலகத்தையும் ஒரு கலக்குக் கலக்கின. கேட்டதும் திடுக்கிட்டேன் —

சண்முகமேஸ்திரியின் உயிர் பிரிந்த நேரத்திற்கும் : எனது கனவில் அவன் தோன்றிய நேரத்திற்கும் தொடர்பிருந்ததை அறிந்தேன். அதிசயித்தேன் —

" சண்முகமேஸ்திரி கொல்லப்பட்டானா? அல்லது தற்கொலையா ?" என்றவாறு இந்திய அரசு பல முரண்பட்ட செய்திகளை அடுத்தடுத்து வெளியிட்டது. அவன் சடலத்தையும் அவசர அவசரமாகத் தீ மூட்டி முடித்தது.

உடல்களுக்குத் தீ மூட்டலாம் . . ஆனால் உண்மைகளுக்கு . . .? சண்முகமேஸ்திரி தற்கொலை செய்தான் என்றமுடிவை என் ஆத்மம் அடியோடு நம்ப மறுக்கிறது.

ஒரு மகத்தான மனிதனை நாதியற்றவனாக்கி, கூவம் நதிக் கரையில் வீசியயெறிந்தது வரலாறு. ஆனாலும் அந்தத் திறமைசாலி தன் வாழ்விலும் : பிரிவிலும் சில செய்திகளை விட்டுப் போயிருக்கக் காண்கிறேன்.

" நாடில்லாத நிலையிலிருக்கும் ஓரினம் எதைச் செய்தாலும் அது குன்றின்மேல் ஏற்றிய தீபமாகச் சுடர்விட முடியாது! " சண்முகமேஸ்திரி தன் மரணத்தால் எழுதிவைத்த இச் செய்தியை ஏந்திச்செல்லுமா அந்த வாடைக்காற்று ? தத்தித்தத்திச் செல்லும் கடலலைகளே ! நீங்களாவது காவிச் செல்வீர்களா ?

ஆற்றல்களை அபாரமாக வளர்த்துவரும் புலம்பெயர் தமிழினம் இதுபற்றி கொஞ்சம் சிந்திக்குமா . . . . . ?

( தொடர்ந்தும் வரும் )



படிப்பகம்

www.padippakam.com




சாவகச்சேரி பெருங்குளப்பகுதிக்கு நான்தான் அப்போதுவிதானையார். ஊர் நன்மை தீமைகளை விதானையார்தானே தீர்மானிக்கிறவர். அந்தக் காலத்தில்தான் இதுவும் நடந்தது.
சாவகச்சேரியில் மூன்று பெரிய கல்லூரிகளில் ஒன்று மகளிர்கல்லூரி. அந்த மகளிர்கல்லூரிக்குப்போகும் பாதையில் ஒரு சிங்கப்பூர்பென்சன்காரர் வந்து மதிலும்வீடுமாய்கட்டி குடியேறினார்.வடிவானவீடு அத்துடன் பூங் கன்றுகள் சுற்றிவர நடுவில் ஒரு நீர்த்தொட்டியும், அதன்நடுவில் ஒரு பளிங்குச்சிலையும் வைத்திருந்தார்.சிலைக்கு உடுப்பொன்றும் இல்லை. அம்மணமானநிலையில் அதுவும் கன்னிப்பெண்ணின் சிலை.வெள்ளைப் பளிங்கினாலான அச்சிலை வயதுவித்தியாசமின்றி எல்லோரையும் பார்க்கச்செய் தது.
தோளில் வழியும் கூந்தல், கூசியபடி சரித்ததலை, நிலம்நோக்கும் விழிகள், நாணத்தில் மெல்லிய கரங்களின் நெரிப்பில் பொருமிய மார்பகங்கள், மெல்லிடைதொடர்ந்து நிலம்வரை நீண்ட பளபளத்த கால்கள். இங்ஙனம் இவள்நிற்க, அவள்மேல் எழுந்து விரிந்து சொரிந்துவிழும் குளிர்நீரில் சதா அவள் நீராடிக்கொண்டிருக்கும் தோற்றம் ஊரிடை பரவியது.கல்லூரி மாணவர்கள்படை காலை,மாலை, இடைவேளை என்றுவந்து இரசித்துத் திரும்பியது.மகளிர்கல்லூரி மாணவிகள் தமது போக்குவரத்துப்பாதையை திசைமாற்றவேண்டிய அளவுக்கு அது ஒரு பெரிய விடயமாகிவிட்டது.

சிங்கப்பூர் பென்சனியார் தனதுகுமரை வீட்டோடு அடைத்துவிட்டார்.என்று கூறி.... கதையை இடைநிறுத்திவிட்டு பலமாகச்சிரித்துக்கொண்டார் துரைராசா விதானையார்.



படிப்பகம்

www.padippakam.com

.கறுப்புக்கோட்டுக்குவெளியே தெரியும் தனது இரண்டு கைகளையும் கோர்த்தபடி கால்மேல் காலிருப்பை சரிசெய்தபடி நிமிர்ந்துஉட்கார்ந்தபடி கதையைதொடர்ந்தார் விதானையார்.

வரச்சொல்லிவிட்டதற்கும் கதைக்கும் தொடர்புவிளங்காமல் பக்கத்துவாங்கில் அமர்ந்திருந்தார் சின்னத்துரை.குளிர்விலகி சூரியகாலமாதலால் டென்மார்க்கின் அந்த சிறுநகரத்தின் மனிதப்பரபரப்புக்கிடையே இலங்கையிலிருந்து வந்து தமது பிள்ளைகளுடன் இருப்பவர்கள்தான் விதானையாரும், சின்னத்துரையும். வீதிமருங்கில் உட்கார்நது இத்தமிழ்வயோதிபர்களை வேடிக்கை பார்த்தபடி பியர் அருந்திக்கொண்டிருந்த அந்த டனிஸ் இளைஞன் தனக்குள் ஏதோ சொல்லிக்கொண்டான்.துரைராசா விதானையார் தொடர்ந்தார்......

மதிலுக்குள்ளே சிங்கப்பூர் பென்சன்காரரின் பாம்பு தூக்கிய குரங்கின் நிலையும், முற்றத்தின் நடுவே குளிக்கும் நிர்வாணச்சிலையும், மதிலுக்கு வெளியே இளைஞர்களும் சைக்கிள்களுமாய்......பிரச்சனை தொடர்ந்தது.

இது பென்சன்காரர் வீட்டுப்பிரச்சனையில்லாமல் ஊர்ப்பிரச்சனைஆகிவிட......

ஊர்விதானையார் என்றமுறையில் தலையிட்டு இறுதியில் அந்தச்சிலையைஅந்தஇடத்திலிருந்து எடுத்துவிட்டோம்.

""ஊர்நியாயமென்று சில உண்டு.

அவைகளை மீறக்கூடாது.காலத்திற்கேற்ப சில அனுசரிப்புக்கள் வேண்டுமானால் செய்யலாம். உதாரணமாக நீ சமபந்தியாய் ஊரிலஎன்னோடு இருந்து பேசலாமோ? இல்ல. ஆனால் டென்மார்கில் வெளிக்குத்தெரியாமல் நாங்கள் பெருந்தன்மையாய் நடந்துகொள்கிறோம்தானே.அதற்காகசாதியள் கலந்து கலியாணம்...........நினைக்கிறியே நடக்குமென்று." சற்று கோபமாக பேசிய விதானையாரின் கைகள் நடுங்கின.

ஊரின் நன்மைகருதி சிலையை எடுத்தவர்கள் தனது பேரனின்நலன்கருதி எனது பேத்தி வனிதாவின் உயிரை ஏன் எடுக்கமாட்டார்கள்..........நினைவுளால் அதிர்ந்துபோன சின்னத்துரை அந்த வாங்கில் குனிந்தபடி முகத்திடை கைகளைப்புதை த்தபடி மௌனமானார். நினைவுகள் நீண்டன........

ஒருநாள் கள்ளிறக்கிவரச்சென்ற தனது தம்பி மிருசுவிலில் மரத்திலேறிய சந்தர்ப்பத்தில் அவன் இருந்த மரத்தை தறித்து அவனை வெட்டிக்கொன்ற

சம்பவமும்;அவனது குடும்பம் இன்றுவரை அல்லாடும் நிகழ்ச்சிகளும் சின்னத்துரையின் மனதிலோடி கண்கள் நீரில் நிறைந்து மனதுவிம்மும் போது அவரின்முன்னால் இரண்டு சப்பாத்துக்கால்கள் தெரிந்தன. நிமிர்ந்தார் சின்னத்துரை; அது அந்த டனிஸ்காரன்.குடித்துமுடிக்காத



படிப்பகம்

www.padippakam.com

அந்த பியா்ப்போத்தில் ஒரு கையிலும், மறுகையை அவர் தோள்களில் வைத்து அவரை அணைத்தபடி சமாதானப்படுத்தும் பாணியில் ஏதோ சொன்னான். கூச்சமிகுதியால் விடுவிப்பதுபோல தன்னை விடுவித்துக்கொண்டார் சின்னத்துரை.

சூரியகாலமென்பதனால் இதமான காற்றும் பசியஇலைகளின் சலசலப்பும் பட்சிகளின் பாட்டும் வெளியெங்கும் நிறைந்திருந்தது.இவைக்கும் அப்பால் சின்னத்துரை பெரியவரின் வழமையான அந்த தளர்ந்தநடை வீடுநோக்கி ஆடிக்கொண்டுபோனது.

விதானையார் துரைராசாவின் பதட்டம் இன்னும் குறையவில்லை. இருக் கையிலேயே கால்கள் நடுங்கின. கண்களை தூரவிலக்கி சிந்தனையை திசைதிருப்பவிரும்பினார். அது நன்றாகவேஇருந்தது.அங்கே இளம் பராயத்தினர் இருவர் முத்தமிட்டுக்கொண்டிருந்தனர்.அதுவும் அயலில் அயலறியாத முத்தம். துரைராசாவிதானையாருக்கு புதுமையாகவும் ஆர்வமாகவும் அதேவேளை எரிச்சலாகவும் முடிந்தது.கட்டுப்பாடற்ற சமூகமொன்றுள் தனது சந்ததி அகப்பட்டதன்விளைவே இன்று தனது பேரன் ரமணன் சாதிகடந்து கல்யாணம்வரை வரத்துணிச்சலையும், முதியோரை மதிக்காத தன்மைகளையும் வளர்த்திருக்கிறது என தன்னுள் எண்ணிக்கொண்டார். இப்பகிரங்கமுத்தங்கள்பற்றிய அவரது எரிச்சல் இன்று நியாயமானதே.ஆனால் அவரது ஆறுமாதகால வெளிநாட்டுவாழ்க் கையையுள் அவருக்கிருக்கும் அச்சமூகம்பற்றிய அறிவும்,ஒருஉயர் மத்தியதர தமிழ்வாழ்வில் கட்டுண்டுகிடந்து முதுமையின் எல்லையில் நிற்கும் இவரது பார்வையும் அப்படித்தான் நினைக்கத்தோன்றும். அது இயல்பானதும்கூட. கட்டுண்ட தமிழ்வாழ்வில் வளர்ந்த இவரது எண்ணங்கள், விருப்பங்கள் எல்லாமே தனது பேரன் ரமணனின் திருமண விவகாரம்தான். எப்படியாவது இதனை நிறுத்திவிடவேண்டுமென்ற ஆர்வம் கத்தியோடு நின்றது.எழுந்து வீடுநோக்கி நடக்கலானார்.தான் எடுத்த முடிவுக்கே வெற்றிவேண்டும் என்ற விருப்பம் அனலாய் கொதித்தது.

ஏதோ அடுத்ததிட்டமொன்று உள்ளவர்போன்ற தெம்பு அவரது நடையில் கிடந்தது.

தூரத்தே ஒரு டனிஸ்காரன் தனது நாயுடன் வந்துகொண்டிருந்தான். விதானையார் ஒரு ஓரமாக ஒதுங்கி நடந்தார்.நாய் இவரைப்பார்த்து இரண்டு தடவை குலைத்துவிட்டு நடந்தது.நாயின் குலைப்புடன் அந்த டனிஸ் காரன் இவரைப்பார்த்து தனதுமொழியில் "நரகங்களே வீட்டுக்குப்போங்கள்" என்று கூறினான்.மொழிபுரியாததனால் விதானையார் சிரித்தபடி நகர்ந்தார்.

அவன் ஏதாவது நாய்க்குக்கூறியிருப்பான் என்பது அவரது ஊகம். அழுத்தமான தார்வீதிகளில் அவரது கறுப்பு சப்பாத்து அசைய நன்கு விறைத்ததேகத்தில் சாதிக்கும்அதிகாரமனம் நெஞ்சைநிமிர்த்த வீட்டுள் நுளைந்தார் விதானையார்.



படிப்பகம்

www.padippakam.com

வீடு அமைதியாக இருந்தது.ரமணனின் தகப்பனும் தாயும் சேபாச்சூட்டில் தொலைக்காட்சியில் மூழ்கியிருந்தனர்.

புதிதா.இவள் ரமணனின் இளையதங்கை. எட்டுவயதுச்சிறுமி. அவளும்அவர்களுடன் ஒட்டிக்கொண்டிருந்தாள்.மகன்விவகாரத்தில் தந்தையாரைவிட பேரன் விதானையார் துரைராசா அதிககவனமெடுப்பதில்

தாயாருக்கு சந்தோசம் அதிகம். இந்த விவகாரத்தில் இதற்குமேல் என்ன என்பதுபோல அவளும் இன்று சும்மா இருந்தாள்.

"ரமணன் எங்கே" என விதானையார் உரத்துக்கேட்கவும்; ரமணன் வெளியே வந்தான்.வனிதா அதே அமைதியுடன் அவன்பின் வந்தாள். விதானையார் அமைதியானார். பாகத்தேகிடந்த கதிரையில் அமர்ந்துகொண் டார். எல்லோரும் அமைதியாயினர். தொலைக்காட்சி தன்பாட்டில் எதையோ விளம்பரப்படுத்திக்கொண்டிருந்தது.

"தாத்தா ...........ரமணன் தொடங்கினான்.

உங்களுக்கு ஓய்வுகாலம் இது.நீங்கள் இப்போ விதானையாரில்லை. மாட்டிறைச்சி அடுப்படிக்குள் அவிந்துகொண்டிருக்க.....நீங்கள் வராந்தாவில் இருந்து இந்துக்கள் புலாலுண்பதில்லையென்று டனிஸ்காரருக்குக்கூறிபெருமைப்படுகிறவர்கள். உங்கள் மூதாதையர் விட்டுச்சென்ற பொய்களுடனேயே வாழ்வைத்தொடங்கி ......வாழ்ந்து முடியும்தறுவாயில்

அதையே என்னிடமும் தரக்கைநீட்டுகின்றீர்கள்.நான் அகதியானபோது, உங்கள் முதுசங்களை இழந்தபோது அதனுள் எல்லாமே எரிந்துபோயிற்று.பெரியவர்களை மதிக்கவேணடும் என்று அடிக்கடி சொல்கின்றீர்கள். பெரியவர்கள் என்பது உயர்ந்தசிந்தனைகளையே குறிப்பதாக நினைக்கவேண்டும்.ரமணன் என்ற அகதிக்கும் வனிதா என்ற ஈழவளுக்கும் எல்லாமுதுசங்க ளுமே சாம்பரானதாய் இருக்கட்டும்...............

அமைதியாக சொல்லிமுடித்து நிமிர்ந்தான் ரமணன்.

விதானையாரை கதிரையில் காணவில்லை.

தொலைக்காட்சியை அணைக்க முயன்றார் ரமணனின் அப்பா.

சிறுமி புதிதா அதை அணைக்கவிடாது தடுத்தாள்.

அப்பா சொன்னார் "இது வயதுவந்தவர்களுக்கு மட்டும்தான்" என்று.

"அப்போ எப்போது **குழந்தைகளுக்கு மட்டும்** படம் போடுவார்கள்?" என்றுபுதிதா கேட்டாள்

அப்பா சும்மா இருந்தார். அவரும் பழம்பெரும் தமிழர்தானே!

முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

## சூரியப்பூச்சிகள்........................................................தமயந்தி

(நெடுங்கவிதைத்தொடர்)

நெஞ்சம் நிறைந்த
கனவைச்சுமந்து
மண்ணைக் காணும் பூரிப்போடு
நாங்கள் படகிற்
பயணம் வந்தோம்.

படகு கிழித்த
கடலின் துளிகள்
எமதுமுகத்தில் வந்துமோதி
தண்ணீர்ப் பூக்கள்
என்று புகலின.

உள்ளம்போலே
உடலும்குளிர
விறைத்தகரத்தில் ஏ.கே சுமந்து
எங்கள் மண்ணை
நோக்கி நாங்கள்.
∴∴
பனைமட்டைப் படலை தாண்டி
யாரங்கே வருவது......?

கடற்கன்னி என்பாரே
அவள்தானோ இக்குமரி?
கடல் தாண்டி கரைக்கிவள்
எப்படி வந்திட்டாள்?

நீர் வடியும் நீள்கூந்தல்
அள்ளிமுடி யாதசைய
நீராடிவருமவளின்
அனிச்ச மலர் மென் முகத்தில்
நீர்த்துளிகள் சில ஊர்ந்து – வெண்
முத்துக் களாய் ஜொலிக்க
மெல்ல அடிபெயர்ந்து
மேனியசை யாதுவரும்
மென்கொடியாள் யாரிவளோ?

மண் திண்ணைப் படியேறி
மென்பாதங் களிரண்டும்
யௌவனத்தின் மேனிதனைச்
சுமந்துள்ளே சென்றன.
அவள்பின்னால் ஊர்ந்துவந்த
இளையதென்றற் காற்றுவந்து
மண்திண்ணை மீதமர்ந்து
சாமரம் வீசியது.

தாழம்பூ வாசனையைத்
தெளித்தாளோ தென்றலிலே?
என்னைத் தொலைத்தவனாய்க்
கிறங்கிப்போயிருந்தேன்.
சுகமோசுகமென்று.

திண்ணை அமர்ந்த தென்றல்
அறிவாயோ இவளை யென்று
தாடையைத் தடவியொரு
கேள்விதனைக் கேட்டுவைக்க
தெரியாதென் றேனசைத்த
தலையாற் பதிலதற்கு.

தாழம்பூ மென்மணத்தை
என்மீது எறிந்து விட்டு
சிதறி நாலா திசைகளிலும்
சிறுதென்றல் ஓடியது.
சிரித்துக் கனைத்தபடி.

யாரிவளோ யானறியேன் – இவளொடு
கூடவந்த தென்றல் தானும்
கூறாமலகன்றதுவே.
யாரைநான் கேட்டறிவேன்.
இந்த
யௌவனக் குமரிபற்றி.

கூரையி லொரு காகம்
அசுரக் குரலெடுத்து
நையாண்டிப் பாட்டுடைத்து
நகைத்தபடி அகன்றுசெல்ல,
நாலாதிசை விழியெறிந்து
நானறியச் சேதிசொல்லும்
நல்லவர் வருகவென
நயமாய் தேடுகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

பேத்திவந் தாளோவென
உப்புப் புளி மிளகாய்
உட்பட அரிசியுடன்
முதுமையாள் திண்ணைசேர்ந்தாள்.

யௌவன க்குமரியவள்
தாயாளின் பேத்தியேன
ஓர்விடை கிடைத்தவனாய்
ஓமென்று தலையசைத்தேன்.

மடிப்பாரம் மறுபிறக்கி
திண்ணையில மர்ந்தபடி
உப்புப்புளி மிளகாய்
அகற்றிய அரிசியிலே
கல் பொறுக்கி கதைதொடர் ந்தாள்.

ஏதனர்த்தம் நேர்ந்தது சொல்
ஏமாற்றுப் பிரிவிடையே
நேற்றிரவின் ஆட்சியிலே
நீ வந்த கலந்தனற்கு?

யானறிவேன் நீயுப்புக்
கரையின் மகனல்ல.
கடலளைந்து வளர்ந்திட்ட
உடலமதும் உனக்கில்லை.
நெய்தலை நுகர்ந்திட்ட
மனுவும் நீ யில்லை.
நீச்சலை அறிந்திட்ட
மீனதுவும் நீயில்லை.

சமுத்திரத்துச் சம்பந்தம்
ஏதுனக்குச் சொல்மகனே!
இயக்கத்தொடுசல் கொண்டு
அக்கரை சென்றாயோ?
அக்கரை யிருந்து
இக்கரை வந்தாயோ?

தலைமுடி கோதி கன்னம் வழியே
உடலைத் தடவிப் பரிவொளி விழியாள்
படர்ந்தெனைக் கவிய,
தாயவள் உதிர்த்த வினாக்களூட் தொலைந்து
விடைதடுமாறி
ஓலமிட் டழுதேன்.

ஐயோ மகனே
கலக்கம் விலக்கு.

பதறிய தாயோ நெஞ்சம் நொந்து,
தன்மடி விரித் தென் உடலைக் கிடத்தி,
உருக்கத்தோடே
வருடமுனைந்தாள்.

எதைநா னறிவேன்
தாய்க்கும் தாயே
தீயிலும் வேகாத் தீயதுயர்களும்
தீயவர் செய்த
கொடுமுறை கேடும்.

என்னுட னைவர்
அக்கரை விடுத்து
எமது மண்நோக்கிக்
கடலில் வந்தோம்.
கரைவரச்சிறிது
கணங்களே யென்று
கனவுகள் நிறையக்
களிப்பொடு சுமந்து
கரைதனை நோக்கி
அலைமேல் வந்தோம்.

கரிய இருளின் போர்வைமூடி
கடலி னிடையே கரும்பேய் ப்படகு
கண்ணிமை மூடி திறந்திட முன்னால்
காதுட் புலனது கிழிபடும் படியாய்
பாரிவேட்டிற் சிதறிப் போனோம்.

கடலின் நடுவே கையில் எதுவோ
அகப்பட வுணர்ந்து பற்றிப் பிடித்தேன்.
கணம் சில கழிவில்
எனது புலனில்
எதுவும் இல்லை.
கண் விழித்தேனோ,
இங்கே கிடந்தேன்.

துயரின் காதை
முடிக்க முன்னம்
துன்பத் துரவால்
சுரந்த நீரில்
விழிகள் மடையில்
விரிசல் கண்டது.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

அறிதிறன் காணல் போட்டி இல: ஊ-3


## பொருத்திக்காண்பது என்ன?

1. கீழே சீரற்று குழம்பிப்போயுள்ள ஒரு படத்தின் துண்டங்களை வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள்.
2.வெட்டி எடுத்த துண்டங்களை நீங்கள் சரியாகப் பொருத்தி எடுக்கும்போது அங்கு ஒரு காட்சியை நீங்கள் காண்பீர்கள்.
3.நீங்கள் காணும் அக்காட்சியைப்பற்றி 15 வரிகளுக்கு மேற்படாமல் விபரக்குறிப்பொன்றை எழுதி உங்கள் பெயர்,முகவரி, வயது என்பனவற்றை குறித்து "Kakam" Baunehøjen 35 3320 Skævinge Denmark என்ற முகவரிக்கு 25.11.95ற்கு பிந்தாமல் அனுப்புங்கள்

போட்டி விதிகள்

1. யாரும் பங்குகொள்ளலாம்
2. சரியாக பொருத்தப்பட்ட படமும், அத்துடன் அப்படத்தைப் பற்றி எழுதப்படுகின்ற விபரக்குறிப்பின் சிறப்பும் கவனத்தில் கொள்ளப்பட்டு போட்டியில் ஒருவர் தெரிவுசெய்யப்படுவார்.
3. தெரிவுசெய்யப்படும் நபரின் பெயர் விபரங்களும், அவரால் எழுதப்படும் படத்திற்கான விபரக்குறிப்பும் அடுத்த மாத காகத்தில் வெளியிடப்படுவதோடு சிறந்த தமிழ்நூலொன்றும் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.


.............................................................காகம்.............................





படிப்பகம்

www.padippakam.com



காகம் இதழ் 10 ல் வெளியான "பொருத்திக் காணப்பதென்ன" இல. ம்–2 ற்கான போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு காகத்தின் நன்றிகள்.
எல்லோருமே நல்ல விளக்கங்களை எழுதியிருந் தார்கள்.மகிழ்ச்சி.
இந்தமுறை தெரிவான வாசகர்:ஜெயம்.ராஜமலர் லங்கோ, டென்மார்க்

அவர் எழுதி அனுப்பிய படவிளக்கம்

..........................................................................

இவ்விடம் இலங்கையின் ஒரு கிராமமாக இருக்கும். இது ஒரு சைவக்கோவில் சுற்றாடல். அந்தக்கிராமத்து மக்கள் சிலர் தாங்கள் இறைவனுக்காக செய்யவேண்டிய ஒரு நேர்த்தியை செய்கிறார்கள். ஒவ்வொரு தலைமுறையாக நிகழும் காவடியாட்டம் நடக்கிறது. இவர்கள் தங்கள் அயலில் உள்ள கோவில் ஒன்றிலிருந்து புறப்பட்டிருக்கின்றார்கள்.காவடி ஆட்டத்திற்கான இசைகளான மேளம்,உடுக்கு, பாட்டு என்பவற்றிற்கு அமைய காவடியை தோளில்வைத்து குனிந்தும் நிமிர்ந்தும் ஆடுகின்றார்கள்...............ஜெயம்.ராஜமலர்.லங்கோ.


காகம்

முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்
எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.

–

ஒரு தாய்

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 11– கார்த்திகை 95
வெளியீடு: ரூலி. பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12
விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200
டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 U$
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 73 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
படைப்பாளிகள்தொடர்பு: திரு.ரவி TIF: 86 40 38 05
வாசகர்கள் தொடர்பு: திரு.செல்வன் TIF:86 64 51 98
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி


சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு
படைப்பாளிகளே
முழுப்பொறுப்பாளிகளாவர்.காகத்தின் எண்ணங்களை
படைப்பாளிகள் பிரதிபலிக்கவேண்டுமென்பதில்லை.
..................காகம்..................



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

"Postbesørget blad, (0900 KHC) " -51033

Til: Thevan
Dyssegården 5,2,tv
7500 Holstebro

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்